[1972 மார்ச் 7

அரசு பேருந்துகளில் நிருபர்களுக்கு இலவசப் பயணச் சீட்டுகள்

* 349 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பேருந்துகளில் பத்திரிகை நிருபர்களுக்கு இலவசப் பிரயாண ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சென்னையில் அனுமதி பெற்ற பத்திரிகை நிருபர்களுக்கு 2,500 கிலோ மீட்டர் வரை பயணம் செய்ய கட்டணச் சலுகை ரெயில்வேயில் கொடுக்கப்படுகிறது. அரசாங்க பஸ்களில் இலவசமாக இல்லாவிட்டாலும், குறைந்த செலவிலாவது அனுமதிக்க அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ரெயில்வேயில் எப்படி என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. குறைந்த செலவிலோ இலவசமாகவோ அனுமதிக்க வேண்டிய செயற்குறிப்பு இப்பொழுது இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், கேரளத்தில், சர்க்கார் பஸ்கள் பூராவிலும், பத்திரிகை நிருபர்களுக்கு இலவசமாகப் பயணம் செய்ய, மதுரை டி.வி.எஸ். நிறுவனத்தார் அனுமதித்து வந்தார்கள். இப்பொழுது பாண்டியன் ரோட்வேயில் அப்படி அனுமதிக்கப்படுகிறது. தொடர்ந்து, சென்னையிலும் அது போல் விரும்பும் கரஸ்பாண்டெண்டுகளுக்கு வசதிகள் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கேள்வி அரசு பேருந்துகளில் பத்திரிகை நிருபர்களுக்கு இலவசமாக பயணம் செய்ய சீட்டுத்தரப்படுமா என்பது பற்றியது. சென்னை மாநகரில் தரப்படுமா என்று கேட்கிறார்கள். பாண்டியன் போக்குவரத்து கழக நிர்வாகக் குழு டி.வி.எஸ். நிறுவனத்தில் கொடுக்கப்பட்ட சலுகையைத் தொடர்ந்து கொடுக்கிறார்கள். அதேபோல் பல்லவா போக்குவரத்து கழகத்திலும் செய்ய, மாண்புமிகு உறுப்பினரின் கருத்து அந்தக் கழகத்தின் நிர்வாகக் குழுவிற்கு அனுப்பப்படும்.

1972 மார்ச் 7]

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்பொழுது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இலவச சீட்டுக்கள், இப்பொழுது அமைந்திருக்கும் பாண்டியா, பல்லவா போக்குவரத்து கழக பஸ்களில் செல்லுபடியாகாது என்கிறார்கள் என்பது உண்மையா ? அப்படியானால் அதை மறுபடியும் செல்லுபடியாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளித்திருக்கும் பாஸ்கள் அரசாங்க பேருந்துகளுக்கு என்று இருந்தாலும், பல்லவா போக்குவரத்துக் கழகத்தில் ஏற்கனவே அரசுத் துறையில் ஓடிக் கொண்டிருந்த பேருந்துக்கள்தான். ஆகவே, இந்தச் சலுகையை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், சேர, சோழ, பாண்டியா போக்குவரத்துக்கள் இப்பொழுது புதிதாக நாட்டுடைமையாக்கப் பட்டவை. அங்கேயும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சலுகை வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அந்த அந்த நிர்வாகக் குழுவினர் அந்தச் செலவினை அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துக்களில் இலவசப் பயணம் செய்ய அனுமதிக்கப் பட்டிருப்பவர்களின் பட்டியலை அமைச்சர் கொடுப்பார்களா ?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துப் பணியாளர்கள், அதிகாரிகள், எம்.வி. எம்.ஓ. சிப்பந்திகள், பார்வையற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், ஆகியவர்கள் (பலத்த சிரிப்பு) எல்லாம், இலவசமாகப் பயணம் செய்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு இலவசமாக அனுமதிக்க உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். அரசாங்கத்தால் அனுமதிக்கப் பட்ட பத்திரிகைகள் பொருத்தவரையிலாவது பாஸ்கள் வழங்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த பாஸ்கள் வழங்கப்படும்போது, அங்கத்தினர் எடுத்துச் சொன்ன யோசனையையும் கருத்தில் கொள்ளப்படும்.